முயிர்க்கிரண் டானுற், சூழுறவிதியாற் பிறந்திடுஞ் சேய்க்குத் தோன்றியபுகர்திசை யதனில், ஊழ்விதிப்படியால் மாலவன்னுளி னுதவிடுந்தாரமென் றுரையே. (உ௩ரு)

எழினிற்காரி தனித்திடவேழோ னேகுவன்வெள்ளிவீ டத னிற், ருழ்வுடன்புகர்மால் பருதிபொன்னுடனே சாரிடம்வளரு கேந் திரமாய், வாழ்வுடன்பிறக்குஞ் சாதகன்றனக்கு வகுத்த னர்காரிநான் மறையூண், சூழுறவிதியா யேகமாமனைவி தோன் றிடுங்காரிமால் போலாம். (உ௩௬)

எழினுக்குடையோன் மாலவனுடனே இருந்திட வளரு கேந் திரத்தில், வாழ்வுடன்காரி புகருடன்கூடி வருமிடமுதய கேந் திரமாய்த், தாழ்வுடன்பொன்ன னுயிருக்கேழதனிற் றரித் திடப்பிறந்தசா தகற்கு, ஊழ்விதிப்படியே யேகமாமனைவி யுரைத் தனர்பாம்புநாள் வருமால். (உ௩எ)

வருவதுவயது பத்துடனிரட்டி வந்திடும்பொன்னவ னா ணில், தருவதுமனவி காரிசேய்போலச் சார்ந்திடுமன்னிய மத னிற், கருதியேவருமென் றுரைத்தனர்மேலோர் கருவழிநாள் முதற் றந்தை, பெருகிடுஞ்செல்வம் பூமிக்ஷேத்திரமாய்ப் பேணி டுஞ்சாதகன் றனக்கே. (உ௩அ)

எழினுக்குடையோன் புகருடன்கூடி யிருந்திட வளருகேந் திரமாய்ச், சூழுறவிதியா லிரண்டஞ்சேழதனிற் றேன்றிடப் பாவர்வந் திடுமால், வாழ்வுடன்மாலோன் திசைதனில் மறை யோன் வந்திடுமூணினிற் றூரம், ஊழ்விதிப்படியே ஏகமாமனவி யுரைத்தனர்சாதகன் றனக்கே. (உ௩௯)

சாதகன்றனக்கு மனவிவந்திடவே தனகனவாகனம் பூமி, பீதகன்திசையிற் சகலபாக்கியமும் பிரபலயோகமும் பிறக்கும், காதலியுடனே காமமோகத்தாற் கலந்துமேவுடனுயி ரொன்றாய் நீதமாய்ச்சுகித்து வாழ்வனென்றுலகில் நிகழ்த்தினர்கணிதநூற் படியே. (உ௪0)

எழினிற்பாம்பு தனித்திடவேழோ னிருந்திடமறைந்தில தானல், வாழ்வுடன்பருதி புகருடன்கொடியோன் மதிமகனுத யகேந் திரமாய்த், தாழ்வுடனேழோன் றனையுமேபாவர் தன்வி ழிப்பார்வையுற் றிடவே, சூழுறவிதியாற் றூரமுமிரண்டாய்த் தோன்றிடுஞ்சாதகன் றனக்கே. (உ௪க)

சாதன்றனக்குப் பத்துநாலேழிற் சார்ந்திடு மனவியர் மண நாள், வேதமாய்மதிநா ளதனிலேமனவி விதித்தனர் நாசமென் றுரையே, போதவேமதிநாள் காரிவந்திடுகிற் பொருந்திடுந் தார முங்கிடைக்கும், நீதமாய்க்கிடைத்த தாரமும்பெலமாய் நேர்ந் திடும் முந்திமாய்ந்திடுமே (உசஉ)

வேறு.

ஏழினுக்குடையோனேழி லிருந்திடப்பவர்வீடாக
வாழ்வுடன்புகர்மால்கேது வருமிடமறையாதாகில்
தாழ்வுடனுதிக்குஞ்சேய்க்குத் தாரமுமிரண்டேயாகும்
ஊழ்விதிப்படியேயாக வுரைத்தனர்சாதகற்கே. (உசங)

ஏழினோன்குருபாம்பொன்று யிருந்திடக்காரிவீட்டில்
தாழ்வுடன்புகர்கேதோடு சாரிடமறைவதானுற்
சூழுறவிதியாற்றாரந் தோன்றிடும்காலஞ்சுற்றல்
ஊழ்விதிப்படியாற்சேரு முரைத்தனர்மனவியேகம். (உசச)

வேறு.

ஏழினுக்குடையோன் புகர்கிரவிபொன் னிருந்திடவுதய கேந்திரமாய், வாழ்வுடனேழில் மதிதனித்திடவே வருமுயிர்சாத கன் றனக்கு, சூழுறவிதியால் நாலுமூன்றொன்றிற் றோன்றிடுந் தாரமொன்றாகும், ஏழினுக்குடையோன் புகர்கிரவிபொன் னி ருந்திட மறைந்திட வருமால். (உசரு)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர்மனவி வருமிடஞ் சொந்த மென்றுரையே, சரியுடன்புகர்நா ளதனிலேமணநாள் சார்ந்தி டும் பாம்புவந்திடுகில், விரிகுழல்மாதே மங்கையால் விரோதம் விதித்தனர் வயதுமுப்பதனில், துரிதமாயோராண் டன்னிய தேசந் தோன்றிடுஞ் சேயவன் மாதோ. (உசசு)

வேறு.

ஏழினோன்மால்வீடேகி யிருந்திடப்புகர்பாம்போடு
தாழ்வுடனிரண்டேழஞ்சிற் றரித்திடப்பாவர்வந்தால்
வாழ்வுடன்தோன்றுஞ்சேய்க்கு வகுத்தனர்மனவிரண்டாம்
ஊழ்விதியிதுவேயென்று முரைத்தனர்சாதகற்கே. (உசஎ)

வேறு.

ஏழினுக்குடையோனுதயகேந்திரத்தி லிருந்திடப்பாவருஞ் சுபரும், தாழ்வுடனதனிற் றரித்திடுஞ் சேய்க்குச் சற்குருநிறமது போல, வாழ்வுடன்மனைவி சொந்தமாய்வருமால் வகுத்தனரம் புலிதிசையில், ஊழ்விதிப்படியாற் றாரம்வந்துதவும் உரைத்தனர் சாதகன்பலனே. (௨௪௮)

வேறு.

ஏழினுக்குடையோன்பொன்ன னிரவிமாலுடனேசேர்ந்து
வாழ்வுடனுயிர்க்குமுன்னால் வந்திடவக்கோள்தானும்
தாழ்வுடன்பாவரோடு தரித்திடச்சுபர்வீடானல்
ஊழ்விதிப்படியாற்றார முரைத்தனரீரஞ்சுக்குள். (௨௪௯)

வேறு.

ஏழினுக்குடையோன் புந்திகேதுடனே இறையவன்வீட்டினிலேக, வாழ்வுடன் புகர்பொன் குளிகனோடேகி மறைந்திடப் பாவர் வீடாகத், தாழ்வுட னுதிக்குஞ் சாதகன்றனக்குத் தரணியிற்பத்துநாலுக்குள், ஊழ்விதிப்படியாற் றாரம்வந்துதவுமுரைத்தனர் கணிதநூலாய்ந்தோர். (௨௫௦)

ஏழினுக்குடையோன் காரிபாம்போடே இருந்திட வுதயகேந்திரத்தில், வாழ்வுடன்புகரும் பருதியும்மாலும் மறைந்திட மந்திரிவீடால், தாழ்வுடனுதிக்குஞ் சாதகன்றனக்குச் சதிருடன் தாரமுமிரண்டாம், ஊழ்விதிப்படியே யிருவருமொன்று யுவந்துவாழ்ந்திடுவ ரென்றுரையே. (௨௫௧)

வேறு.

ஏழினுக்குடையோனோடே இரவியும்பாம்புமாகத்
தாழ்வுடன்புகர்வீடாகித் தரித்திடவக்கோள்தானும்
வாழ்வுடனுயிர்க்கிராறில் வந்திடுஞ்சாதகற்கு
ஊழ்விதிப்படியேதார முரைத்தனரிருவர்மாதே. (௨௫௨)

மாதவர்மொழியென்றோதே மனைவியரிருவர்தாமும்
வேதமாயீரெட்டாறில் விரைவுடன்மனைவிசேர்ந்து
நீதமாயிருக்குமென்று நிச்சயமுரைத்தார்மேலோர்
ஓதிடுமனைவிபாக முரைத்தனர்தாணிமீதே. (௨௫௩)

எழினோன்பவரோடொன்று யிருந்திடவுயிர்க்குமுன்னால்
வாழ்வுடனக்கோள்பத்தில் வாழ்ந்திடப்பவரோடானால்
சூழுறவிதியாற்றாரந்தோன்றிடு மொன்றேயாக
ஊழ்விதிப்படியாற்சேரு முரைத்தனரரவின்போக்கில். ( )

வேறு.

எழினுக்குடையோன் காரிவீடதனி லிருந்திட மதிபுகர்ப ருதி, சூழுறவுடனென் றாகியேமறையத் துணிவுடனெட்டிரண் டஞ்சில், வாழ்வுடன் கடுங்கோள் தனித்திடவிருக்க வந்திடுஞ் சாதகன்றனக்கு, ஊழ்விதிப்படியாற் றாரமுமிரண்டா யுரைத் தனர் மேலவர் மொழியால். (௨௫௫)

மேலவர்மொழியா லிறையவன் திசையில் விரைவுடன் வெள்ளியூணதனிற், சாலவேதாரம் அன்னியமாகச் சார்ந்திடுஞ் சாதகன்றனக்குத், தூலமாய்க்காரி திசைவருமாகிற் றுஞ்சிடுந் தாரமேபின்னும், ஏலவேமனவி காரியந்தியத்திலிசைவுடன் வரு மென மொழியே. (௨௫௬)

வேறு.

எழினிலருணன்பாம்பு இருந்திடப்பார்வர்வீடால்
வாழ்வுடன்கரிசேய்சுங்கன் வருமிடமறையாதாகில்
சூழுறவிதியாற்றாரம் தோன்றிடுமேழோன்நாளில்
ஊழ்விதிப்படியால்மேலோ ருரைத்தனர்சாதகற்கே. (௨௫௭)

சாதகன்றனக்குமேலோர் சாற்றினார்மனவியாலே
வேதமாயிராஜயோகம் விதித்தனர்கணிதமாய்ந்தோர்
போதவேஆறேழன்நாளிற் பொருந்தியபுகர்வந்துற்றாற்
சேதமாமனவிநாசம் செப்பினார்சாதகற்கே. (௨௫௮)

வேறு.

ஏழினிற்காரி தனித்திடவேழோ னிருந்திட வுச்சமாட்சிய தாய், வாழ்வுடனாரல் பாம்புடன்கூடி வருமிடம் பஞ்சமமாகச், சூழுறவிதியாற் சொந்த வீடதனிற் றோன்றிடச் சுங்கன்வந்துற் றால், தாழ்வுடன்ராகு திசைவருமதனிற் சார்ந்திடுந்தார மென் றுரையே. (௨௫௯)

வேறு.

எழினுக்குடையோனேழி லிருந்திடஆறேழொடு
தாழ்வுடனு யிருக்கெட்டிற் றனித்திடப்புகர்வந்துற்றால்

வாழ்வுடன்கேதுநாளில் வளர்திசைபாதியானல்
சூழுறவிதியாற்றாரம் தோன்றிடும்ஏகமாதோ. (உசுO)

ஏழிஞேன்சசிவீடேகி யிருந்திடத்தனக்கோளோடு
வாழ்வுடனக்கோள் தன்னை வளர்சனிநோக்குமாகில்
ஏழிஞேன் திசையிற்றாரம் இசைவுடன்ருேன்றிவாழும்
ஊழ்விதிப்படியாமென்று முரைத்தனர்சாதகற்கே. (உசுக)

வேறு.

ஏழினுக்குடையோன் பவருடனென்று யிருந்திடவளரு கேந்திரமாய், வாழ்வுடன்காரி புகருடன்குளிகன் வருமிடங்காரிவீடுற்றால், சூழுறவிதியாற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றிடுந்தாரமொன்றாகும், ஊழ்விதிப்படியாற்பத்துமாறெட்டி லுரைத்தனர் மனவியால் யோகம். (உசுஉ)

வேறு.

ஏழிஞேன்புகரோனுகி யிருந்திடவெட்டாருனல்
வாழ்வுடனிரண்டஞ்சேழில் வந்திடப்பவர்வந்துற்றூற்
சூழுறவிதியால்வந்து தோன்றியசாதகற்குத்
தாழ்வுடன்மனவிமூன்று சார்ந்திடுந்தரணிமாதோ. (உசுங)

மாதவர்மொழிநூலாலே வருமதிதிசையிற்றாரம்
வேதமாய்வருமென்றோதி விதித்தனர்கணிதநூலோர்
ஓதினார்பாம்புநாளி லுயர்வுடன்பருதிவந்தால்
நீதமாயிருவர்மங்கை நேரிடுஞ்சேதமொன்றே. (உசுச)

மந்தனுமேழின்கோளும் வளர்புகர்மதிமாலோடு
விந்தையாயிக்கோளொன்ருய் விளங்கிடமறையாதாகிற்
சிந்தையாற்றேன்றுஞ்சேய்க்குத் திறமுடன்குருநாள்வெள்ளி
வந்திடுமபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும். (உசுரு)

சேருமென்றுரைத்தார்மேலோர் செப்பிடுமனவியாலே
கூறினர்பலன்களெல்லாங் குறித்தனர்சமனுமென்றூர்
சீருடன்சாதகற்குச் சேர்ந்திடுமனவிமுந்திக்
கூறினர்நாசமென்றே குறித்தனர்கணிதநூலோர். (உசுசு)

ஏழிஞேன்மால்சேயோடங் கிருந்திடக்காரிவீடாய்
வாழ்வுடன்புகர்பொன்திங்கள் வருமிடமறையாதாகத்

தாழ்வுடன்தோன்றுஞ்சேய்க்குச் சார்ந்திடும்புகர்வந்துற்றால்
ஊழ்விதிப்படியால்மங்கை யுரைத்தனரேகமென்றே. (௨௬௭)

காரியுமேழின்கோளுங் கடும்பவருடனென்றாகிச்
சாரிடம்புகர்வீடாகித் தரித்திடவதனிற்கோளன்
கூருயிர்தனக்குமூன்றிற் குறுகிடப்பிறந்தசேய்க்குச்
சீருடன்புகர்நாள்வந்தாற் சேர்ந்திடுந்தாரமொன்றே. (௨௬௮)

தாரமும் ஏகமாகச் சாற்றினர் கணிதநூலோர்
சாரமாயிரண்டேழஞ்சிற் றரித்திடத்தீக்கோள்சேர
ஓருயிர்தனக்கிரண்டில் உயர்வுடன்குருவந்துற்றால்
பாரமாமனவிரண்டாய்ப் பகர்ந்தனர்நாசமொன்றே. (௨௬௯)

ஏழினேன்புகரோடேகி யிருந்திடமறைவீடாகச்
சூழுதற்குடையோன்காரி தோன்றியகுளிகனோடு
வாழ்வுடன்புகர்க்கொன்பானில் வந்திடப்பிறந்தசேய்க்குத்
தாழ்வுடன்குருநாள்மங்கை சார்ந்திடும்பெலமென்றோதே. ()

ஓதியவேழாந்தான முயர்பவர்வீடேயானால்
வேதமங்கலமாய்முந்தி விதித்தனர்மனவிநாசம்
பேசதவேயேழாந்தானம் புகர்குருவீடேயானால்
சேதமாம்புருடர்முன்னாற் செத்திடுந்தரணிமாதே. (௨௭௧)

வேறு.

குருவுடனேமதியுமொன்றா யுயிர்க்கேழாகிக்
குறுகிடவக்கோளனுமே பாம்போடொன்றாய்
வருமுயிருக்கொன்பதனிற் சுபமிலாதால்
வக்கிரனும்நாலின்கோள் மறையாதானால்
சரியுடனேராகுதிசை யதனிற்காரி
சார்ந்திடுஞ்சேயவன்றனக்கு மனவிசேரும்
விரிகுழல்பைங்தொடிமாதர் மரணமுந்தி
விதித்தனர்கள்கணிதமொழி தமிழாய்ந்தோர்கள். ()

வேறு.

ஏழினிற்பாம்பு தனித்திடவேழோ னிருந்திடவுயிருக்கிரா றில், வாழ்வுடனதனிற் கரியுடன்மாந்தி வந்திடமதிக்குக் கேந்திரமாய்த், தாழ்வுடனுயிரிற் புகருடனக்கோள் சார்ந்திடச்சாதகன்மணநாள், சூழுறவிதியாற் கரிதிசைமுடிவிற் றேன்றிடுமனவிமுன்சேதம். (௨௭௩)

சேதமாமனவி கணிதநூற்படியே செப்பினேஞ்சாதகன் றனக்கு, ஓதிடுமேழின் கோளர்வந்திடுகி லுறைந்திடுநாதனு முபயந், தீதுடன்பவர்கள் சேர்ந்திடவவற்குச் செப்பியபன்னிரண்டதனில், வேதமாய்க்கொடியோன் புகருடன்கூடி விளங்கிடச்சுபர்மனே வந்தால். (உஎச)

வந்திடும்புகரோ னிருந்திடுங்கோளன் வருந்திசைநாளினிற்கேது, சிந்தையாய்வருநாள் பாதிமேற்புகரிற் செப்பியதாரம்வந்திடுமே, விந்தையாய்வரினும் தாரமேஜனனம் விளங்கிடும்சமனெனவருத்தம், முந்திமாய்ந்திடுமே கெணிதநூற்படியே மொழிந்தனருலகினில் மேலோர். (உஎரு)

வேறு.

சந்திரனுங்கேந்திரமா யேழாந்தானம்
தனித்திடவேயதற்குடையோன் சாருமில்லம்
வந்திடவேமால்மதிவீ டாகவிக்கோள்
வரவவர்களுடன்பவர்கள் தரிக்குமாகிற்
சிந்தையுடனுபயமதிற் கொடியபாவர்
சேர்ந்திடவேஅவர்தனக்கு நாலஞ்சேழில்
விந்தையுடன்புகர்வளர வரினுஞ்சேய்க்கு
விதித்தனர்களுபயமென மனைவிசேரும். (உஎசா)

சேருமெனவோர்மனவி புகர்தன்நாளிற்
செப்பினர்முற்பாதியின்மேல் மணஞ்செய்விக்கும்
கூறுமெனவருமனவி யொழியும்வெள்ளி
குறுகியநாள்திசைமுடிவில் மரணங்காட்டும்
சாருமெனவோர்மனவி யலரிநாளிற்
றந்திடுமென்றோதினர்கள் தரணிமீது
சீருடனேஅம்மனவி சொந்தமென்றே
செப்பினர்கள்கணிதமொழி திறத்தைப்பாரே. (உஎஎ)

வேறு.

எழி னிற்கரி யிந்துபரிவுடன்
தாழ வேவரச் சற்குருசுங்கனும்
வாழ வேஆரல் மதிமகனென்றதாய்ச்
சூழ வேவொன்று தோன்றிடுந்தாரமே. (உஎஅ)

வேறு.

எழினோன்சுபராய்க் கேதுபொன்னுடனே இருந்திடமூன்றுபன்னொன்றாய், வாழ்வுடன்பவமாய் வந்திடவக்கோள் மறைந்திடச்சுபர்கள் நோக்கில்லாத், தாழ்வுடன்புகரோன் சாரிடம்பெலமாய்த் தனித்திடவுயிர்க்கு மூன்றுற்றால், சூழுறமனவி தோன்றிடும்புகரிற் சொல்லினர் சேயுடனாளில். (௨௭௯)

எழினிற்பாம்பு தனித்திடவேழோ னிருந்திடவுச்சமாட்சியதாய், வாழ்வுடன்புகரோன் வருமிடம்பெலமாய் வளர்ந்திடப்பாவர்நோக்கிடுமால், சூழுறவிதியா லிருபத்தேழொன்றிற் றோன்றிடு மனைவிபொன் னிறமாய், ஊழ்விதிப்படியால் வருமெனக்கணிதருரைத்தனர் சாதகன்றனக்கே. (௨௮௦)

வேறு.

எழினோன்நாலேழ்பத்தி லிருந்திடச்சுபர்கள்நோக்க
வாழ்வுடன்புகர்மாலொன்றாய் வருமிடமதிக்கேழுற்றால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமொன்றேயாகத்
தாழ்வுடனீராறொன்றிற் சார்ந்திடுமனவிகாரி. (௨௮௧)

எழினோனுயிர்க்கீராறி லிருந்திடவேழிற்றீக்கோள்
தாழ்வுடன்மூன்றாறெட்டுத் தானவீடதனிற்ஈங்கன்
சூழதாய்ப்பரிமாலொன்றாய்த் தோன்றிடப்பவர்நோக்குற்றால்
வாழ்வுடன்புகர்நாள்மங்கை வகுத்தனர்தனதில்மாதோ. (௨௮௨)

எழினுக்குடையோனேழி லிருந்திடப்பாவர்நோக்கச்
சூழதாய்ப்புகர்மால்வெய்யோன் தோன்றிடப்புகர்வீடானால்
வாழவேவருஞ்சேய்மங்கை வகுத்தனர்புகர்நாள்வெய்யோன்
தாழ்வுடனபகாரத்திற் சார்ந்திடுமனவியொன்றாய். (௨௮௩)

எழினோன்புகர்மால்வெய்யோ னிருந்திடவுயிர்க்கேழாக
வாழ்வுடனக்கோள்தன்னை வரும்பவர்நோக்குமாகிற்
சூழுறவிதியால்வந்து தோன்றியசேய்க்குமங்கை
ஊழ்விதிப்படியாற்கேது வுதவிடும்திசைநாள்மாலில். (௨௮௪)

மதிமகனேழின்கோளும் வரும்புகருடனொன்றாகிச்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடமறையோன்வீட்டில்
விதியுடனரவுநாளில் விளங்கியபுகர்வந்துற்றால்
மதிநிறமனவியாக வந்திடும்அன்னியத்தில். (௨௮௫)

ஏழிலேனுதயமேறி யிருந்திடக்காரிநோக்கத்
தாழ்வுடன்புகர்மால்வெய்யோன் சாரிடமிரண்டேழஞ்சாய்
வாழுமித்தானந்தன்னில் வந்திடப்பிறந்தசேய்க்கு
ஊழ்விதிப்படியால்மங்கை யுரைத்தனர்குருநாள்மாதோ. ()

மாதவர்மொழியாற்பொன்னன் வருந்திசையதனில்வெள்ளி
வேதமாய்வருநாள்மங்கை விதித்தனரதிகமாக
ஓதினர்மனவிபொன்னன் ஒளிர்மதிநிறம்போலாக
நீதமாய்வருமென்றோதி நிகழ்த்தினர்கணிதநூலோர். (௨௮௭)

வேறு.

சூரியன்சேய்மால்மற்றயோ னுயிரின்கோளும்
சுகமாயெட்டுடையோனுங் கருமத்தோனும்
சீருடனேவுயிர்தனக்கு மூன்றேழ்பத்திற்
சேர்ந்திடவேகாரிவருங் கிரகநாதன்
கூறிடவேசுபர்வீடாய் மறையவந்த
கோதைவருமாயுள்விதி குறிக்கலாகும்
சூரியன்மால்சேய்புகரோன் மறைபாம்பாகத்
தோன்றியநாள்வரும்வயது சொல்லுமாதே. (௨௮௮)

வேறு.

ஏழிலேன்கேதொடொன்று யிருந்திடப்புகர்க்கீராறில்
வாழவேவுயிர்க்கஞ்சேழில் மதிமகன்புகர்வந்துற்றால்
சூழுறவிதியாற்பாம்பு தோன்றியதிசையில்வெள்ளி
வாழ்வுடனபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும். (௨௮௯)

சூரியனேழின்கோளுந் தோன்றியகேதொடொன்றாய்ச்
சாருயிரதனிற்காரி தரித்திடப்புகரேழுற்றாற்
சீருடன்றோன்றுஞ்சேய்க்குச் செப்பினர்மனவியொன்றாய்க்
கூறினரரவுநாளிற் குறித்தனர்புகர்வந்துற்றால். (௨௯௦)

வேறு.

ஏழினிற்காரி தரித்திடவேழோ னிருந்திடவுச்சமாட்சியி
னால், வாழ்வுடனக்கோ ளுடன்புகரொன்றாய் வளர்ந்திடச்சுப
மிலாதிடுகில், சூழுறவிதியாற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றிடுந்
தாரமுமிரண்டாம், ஊழ்விதிப்படியா விருபதேழொன்றி லுத
விடு மொன்றுமாய்ந்திடுமே. (௨௯௧)

எழினுக்குடையோன் கேந்திரமதனி லிருந்திடச்சுபமிலாதிடுகில், வாழ்வுடன்மாந்தி புகர்கரியுடனே வருமிடமுயிர்க்கிரண்டதனால், சூழுறவிதியாற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றிடுங் காரிபோல்மனவி, ஊழ்விதிப்பயனாற் பத்துமெட்டாறுள்ளுரைத்தனர் கணிதநூன்மதியே. (௨௯௨)

மதியுளசேய்க்குமனவியொன்றாக வகுத்தனர்மேலவர்மொழியால், சதிருடனுயிருக்கேழினோன்பவரில் சார்ந்திடநோக்கிடுமானால், பதிதனில்வளருஞ் சாதகன்றனக்குப் பகரிருதாரமென்றுரையே, விதியுடன் தோன்றிச் சேதமாமதியில் விதித்தனருடன்வரும்பெலமாம். (௨௯௩)

வேறு.

சந்திரன்குருகேதொன்றாய்ச் சாரிடமேழதாக
வந்திடவதனிற்கோளன் வருமிடமீராறானால்
சிந்தையாலுயிரிற்சுங்கன் சேர்ந்திடப்பவரோடானால்
விந்தையாமனவியொன்றாய் விதித்தனரீரேழ்பத்துள். (௨௯௪)

சூரியனேழின்கோளுந் தோன்றிடமறையாதாகச்
சீருடன்மறையோன்சுங்கன் சேரிடஞ்சுபர்வீடாகில்
ஆறிரண்டெட்டுமெஞ்சா மாண்டுபொன்னிறமாயொன்று
கூறினர்சாதகற்குக் குணமுளமனவியோதே. (௨௯௫)

ஓதவேமனவிபொன்போ லுரைத்தனர்கணிதநூலோர்
வேதமாம்புகர்பொன்தன்னை விரைவுடன்பவர்நோக்குற்றால்
சேதமாமங்கையொன்று செப்பினாரரவுநாளில்
நீதமாயுயிரோன்வந்தால் நிகழ்த்தினர்மனவியொன்றே. (௨௯௬)

எழினோன்மறையோடொன்றா யிருந்திடமூன்றாறெட்டில்
தாழ்வுடன்புகர்மால்கேது சாரிடங்கரிவீடுற்றால்
சூழுறவிதியால்வந்து தோன்றிடுஞ்சேய்க்குமங்கை
வாழ்வுடனொன்றேயாக வகுத்தனரிருபத்தாறில். (௨௯௭)

குருவுமேசேய்வீடேகக் கொடியவன்குருவீடேகப்
பருதிதன்கிரகஞ்சுத்தம் பாவர்கள்முன்பின்னாகச்
சுருதியாய்ப்புகருஞ்சொந்தம் துணிவுடனில்லமானால்
வருநிதியதிகமாகும் மனவியரேகமாமே. (௨௯௮)

மந்தனும்மதிவீடேக மதியுமேநீசமாகச்
சிந்தையாயதற்குநாதன் சேரிடம்சுபர்வீடானால்
சுந்தரத்துடனேவாழ்வன் துணிவுடனிருநான்கேழில்
விந்தையாய்மனவிசேரு மென்றனர்மேலோர்தாமே. (௨௯௯)

மேலவர்மொழிதான்சொல்வேன் விரைவுடனிருபத்தெட்டில்
மாலவனபகாரத்தில் வந்திடுமொன்றதாகும்
பாலகனாலேயுண்டாம் பண்புடனமைந்தசாவாம்
சாலவேஅதற்குமேலாய்ச் சதிருடனிருப்பானாகும். (௩௦௦)

சதிருடன்கெணிதமாகச் சாற்றினார்பிறக்குஞ்சேய்க்கு
விதியுடனுயிருக்கேழோன் விளங்கியபவரோடொன்றாய்
மதிமகன்புகர்க்கீராறில் வந்திடச்சுபர்வீடானால்
பதிதனிற்றோன்றுஞ்சேய்க்குப் பகர்ந்தனர்மனவிரண்டாய். ( )

மனவியரிரண்டேயாக வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
அனையவன்றனக்குமுன்னா லறைந்தனர்மொழிகளெல்லாம்
வினையுடனுதவாதென்றே விதித்தனர்புகர்முன்போனால்
மனவியரிருவர்சேரும் மாய்ந்திடுமொன்றுமாதோ. (௩௦௨)

ஏழினோருயிருக்காறி லிருந்திடச்சுபர்வீடாக
வாழ்வுடனுயிர்க்கோளோடு வந்திடப்புகரொன்றாகித்
தாழ்வுடனிக்கோள்தன்னைச் சற்குருநோக்குஞ்சேய்க்குச்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமறைநாளோதே. (௩௦௩)

ஓதிடுமறைபிற்பாதி யுரைத்தனர்மனவிகாரி
வேதமாய்வருமென்றோதி விதித்தனர்கணிதநூலோர்
போதவேமனவியாலே பொருந்தியபலன்களெல்லாம்
வாதமாமுதவாதென்று வகுத்தனர்பிறக்குஞ்சேய்க்கு. (௩௦௪)

மதிமகனேழின்கோளும் வரும்புகருடனொன்றாகிச்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றரித்திடமறைநோக்குற்றால்
விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்மனவியொன்றாய்ப்
பதிதனில்வருமென்றோதிப் பக்ர்ந்தனர்கரிநாள்வந்தால். (௩௦௫)

ஏழினோனுயிர்க்கீராறி லிருந்திடச்சுடமிலாதால்
வாழ்வுடனுயிர்க்கேழ்தன்னில் வந்திடக்கரிகேதானால்
சூழுறவிதியால்வந்து தோன்றியசாதகற்கு
ஊழ்விதிப்படியேமங்கை யுரைத்தனரிருவர்மாதோ. (௩௦௬)

மாதவர்மொழியாற்பொன்னன் வருந்திசைபாதிதன்னில்
நீதமாய்மணம்புரிந்த நேரிழையாளைக்கூடிப்
பேதமில்லாமல்வாழ்வன் பின்கரிவரமின்னாசம்
காதலியுடனும்வேட்டல் காளைக்குப்பெலமென்றோதே: (௩0௭)

ஏழினோன்புகரோடொன்றா யிருந்திடச்சுபர்வீடாக
வாழ்வுடனிக்கோள்தானும் வருமிடம்மறையாதானால்
தாழ்வுடன்மனவியொன்று சார்ந்திடுபலனுமற்பம்
ஏழினோன்றனதிற்சேரு மிசையுடன்பெலமென்றோதே. (௩0௮)

ஏழினோன்குருவீடேகி யிருந்திடவேழிற்சுங்கன்
தாழ்வுடனேழோன்வெள்ளி தனித்திடச்சுபர்நோக்கில்லாச்
சூழுறவிதியாற்பாம்பு தோன்றியதிசையிற்பொன்னன்
வாழ்வுடனபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும் (௩0௯)

மதிமகனேழின்கோளும் வன்புகர்குருவோடொன்றாய்ச்
சதியுடனுயிர்க்கீராறில் தரித்திடச்சுபமிலாதால்
விதியுடன்கரிநாள்மங்கை விதித்தனர்மதிவந்துற்றால்
அதிவிதிப்படியால்மேலோ ரறைந்தனர்கணிதநூலால். (௩௧0)

ஏழினோன்மால்வீடேகி யிருந்திடச்சுபமிலாதால்
வர்ழ்வுடனிரண்டேழுஞ்சில் வந்திடக்கடுங்கோளாகத்
தாழ்வுடனுயிர்க்கொன்பானில் தனித்திடப்புகர்வந்துற்றால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமிருவர்செப்பே. (௩௧௧)

செப்பிடுமரவுநாளிற் றிசைவருமுன்னாட்பாதி
இப்புவிபிறக்குஞ்சேய்க்கு எழிலுறுமனவிசேரும்
துப்பிதழாய்கேளொன்று துஞ்சிடுமரவுபோக்கில்
ஒப்பிடுமரவிலொன்றே உகந்திடுமனைவிசேய்மால். (௩௧௨)

மால்புகரேழின்கோளும் வருங்குளிகனுமொன்றாகிச்
சாலவேவுயிர்க்குநாலில் தரித்திடச்சுபர்நோக்கில்லா
தூலமாய்மாலோன்நாளில் தோன்றியதிசையிற்பாதி
கோலமாய்மனவிசேருங் குறித்தனர்மறைபோல்தேகம். (௩௧௩)

சுங்கனுங்குருவீடேகத் துணிவுடனதற்குநாதன்
சங்கையானுயிருக்காறிற் றரித்திடப்பாம்போடொன்றாய்த்
தங்கியவேழின்கோளன் சாரிடந்தன்வீடுற்றாற்
பங்கமில்லாமற்பாம்பிற் பகர்ந்தனர்மனவிசேரும். (௩௧௪)

மால்புகர்பரியேழோனும் மறைந்திடவுயிர்க்கீராறில்
தூலமாயிவர்கள் தன்னைத் துணிவுடன்கரிநோக்குற்றால்
நீலன்வந்திடுநாள்மங்கை நேர்ந்திடுந்திசையிற்பாதி
மேல்மொழிப்படியால்தாரம் விதித்தனரிருவர்சேரும். (ருகரு)

இருவரென்றுரைத்தார்கன்னி யிருவரிலொருவர்நாசம்
வருமுயிர்தனக்குமேழோன் வருந்திசையதனில்மாயும்
தருகுமத்திசையில்மங்கை சார்ந்திடுமதிகமாக
வருவதுபிலமென்றோதி மதித்தனர்மனவிகாரி. (ருகசு)

மனவியர்வருமென்றோதி வகுத்தனர்கணிதமாக
வினையுடன்பரிமால்சுங்கன் விளங்கிடஅதிபன்றானும்
தனையுடனுயிர்க்கெட்டாகித் தரித்திடநீசமுற்றால்
மனவியரொன்றேசேரும் மாய்ந்திடுஞ்சேயென்றோதே. (ருகஎ)

வேறு.

குருவுடன்குளிகன் குருதியேழோனுங் குருகிடவுயிர்க்கு மூன்றதனால், வருமுயிர்தனக்கே அஞ்சினோன்புகரும் வருமிடஞ் சுபர்மனைமறையால், தருகுமிப்படியாற் பிறந்திடுஞ்சேய்க்குச் சார்ந்திடுந் தாரமொன்றாகக், கருதிமேபாம்பு திசைமுடிவதனிற் கட்டினர் மனவியென்றுரையே. (ருகஅ)

வேறு.

ஏழினோன்புகர்க்கீராறி லிருந்திடப்பாவரோடு
சூழதாய்ப்புகருமஞ்சோன் தோன்றிடமால்வீடானல்
வாழவேதோன்றுஞ்சேய்க்கு வகுத்தனர்மனவியொன்றாய்த்
தாழ்வுடன்கொடிநாள்போக்கிற் சார்ந்திடுமன்யமாக. (ருகக)

ஏழினோனுதயமேறி யிருந்திடவொன்பானோடு
வாழ்வுடனுயிர்க்கிரண்டில் வரும்புகரஞ்சோன்வந்தால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடும்பிலமாய்ச்சொந்தம்
தாழ்வுடனீரெட்டானற் சார்ந்திடுமனவிகாரி. (ருஉ0)

வேறு.

ஏழினோன்சுபராய்ப் பாவர்வீடேகி யிருந்திடப்புகருக்கீ ராறில், நீளமாய்ப்பாம்பு கவியுடனொன்றாய் நின்றிடவோர்மனை மறையால், வாழவேபுகர்நாள் திசைதனிற்பாரி வகுத்தனர்மன வியாற்பலன்கள், தாழ்வுடன்வருமென் றோதினர்சேய்க்குத்தார முமொன்றெனச்சாற்றே. (ருஉக)

வேறு.

ஏழினோனுதயமேறி யிருந்திடவேழிற்பாவர்
தாழ்வுடனுயிருக்கெட்டிற் றனித்திடப்புகர்வந்துற்றால்
வாழ்வுடனக்கோள்தன்னை வரும்பவர்நோக்குமாகிற்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமிருவரோதே. (௩௨௨)

ஓதிடும்புகர்நாள்பொன்னன் உயர்வுடனபகாரத்தில்
வேதமாந்தாரமொன்று வேட்டலாமதுவும்பின்னாற்
சேதமாமில்லாள்சுங்கன் சேர்திசைமுடிவிலுண்டாம்
ஆதவன்வரவுமோர்பெண் ணடைகுவன்தரணிமீதே. (௩௨௩)

ஏழினோன்கரிவீடேகி யிருந்திடக்காரிமாந்தி
வாழ்வுடனிவரொன்றாகி வந்திடவேழிற்சுங்கன்
தாழ்வுடனக்கோள்தன்னைச் சதிருடன்பவர்நோக்குற்றால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமிருவர்மாதோ. (௩௨௪)

மாதவர்மொழியாற்கேது வருந்திசையதனில்மங்கை
வேதமாய்வருமென்றோதி விதித்தனர்கணிதநூலால்
ஓதினார்புகரிலொன்றோ வுரைத்தனர்நாசங்காட்டும்
நீதமாய்ப்புகர்முற்பாதி நேர்ந்திடுமனவியொன்றே. (௩௨௫)

சுங்கனுமுயிர்க்கெட்டாகித் தோன்றிடச்சுபர்வீடாகச்
சங்கையாயேழோன்காரி சதிருடன்குளிகனோடு
தங்கிடவோர்வீடாகித் தரித்திடப்பவர்வீடானால்
மங்கையர்வருநாள்மேலோர் வகுத்தனர்பாம்பில்மாதோ. ( )

ஏழினோன்குளிகன்காரி யிவர்களம்புலிக்கெட்டாகத்
தாழ்வுடன்புகரோனில்லந் தனித்திடஅட்டமத்தில்
வாழ்வுடனரவுநாளில் வருந்திசையதனின்முன்னாள்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமேகமாக (௩௨௭)

மதிமகன்பரிகேதோடு வருமிடம்புகர்க்கீறாறில்
சதியுடனுயிர்க்குமூன்றில் தனிப்புகர்சுபர்நோக்கில்லா
விதியுடன்புகர்நாள்மாலில் விளங்கிடுமனவிகாரி
பதிதனில்வருமென்றோதிப் பகர்ந்தனர்கணிதநூலோர். (௩௨௮)

நூலறிவிதமாய்க்காமத் தானத்தைக்கோளைப்பாவர்
தூலமாய்நோக்குஞ்சேய்க்குத் தோன்றிடுமனவிரண்டாம்
சாலவேபருதிபோக்கிற் சாய்ந்திடுமனவியொன்று
கோலமால்சசிநாள்வந்தாற் குறித்தனர்மனவிசேரும். (௩௨௯)

ஏழினோன்புகர்பானென்று யிருந்திடவுயிர்க்காறகத்
தாழ்வுடனிரண்டேழஞ்சிற் றனித்திடப்பவர்வந்துற்றால்
வாழ்வேதோன்றுஞ்சேய்க்கு வகுத்தனரீரேழஞ்சிற்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுந்தரணிமாதே. (௩௩௦)

மாதவர்மொழியாற்சுங்கன் வருமுயிர்க்கோளோன்றன்னை
வேதமாய்க்கரிநோக்குற்றால் விளங்கிடுஞ்சேய்க்குமங்கை
ஓதினாரிருவராக வுரைத்தனர்பரிநாள்வந்தால்
சேதமாமனவியொன்று செத்திடுமொன்றுவாழும். (௩௩௧)

ஏழினோன்புகர்சேய்வெய்யோ னிருந்திடமுயிர்க்கேழாக
வாழ்வுடனிரண்டேழஞ்சில் வந்திடக்கடுங்கோளானால்
சூழுறவிதியால்வந்து தோன்றிடுஞ்சேய்க்குத்தாரம்
ஊழ்விதிப்படியேமூன்றென் றுரைத்தனராய்ந்துசெப்பே. ()

செப்பிடும்வயதுபத்தேழ் சேர்ந்திடுந்தாரமொன்று
இப்படியிருபத்தேழி லிசைந்திடுமனவியொன்று
தப்பிலாமுப்பத்தொன்றிற் சார்ந்திடும்பாரியொன்று
துப்பிதழாய்கேள்மூன்றுஞ் சுகமுடன்வாழுமென்னே. (௩௩௩)

சந்திரன்புகர்சேயொன்றாய்ச் சாரிடமால்வீடாகி
வந்திடவுயிர்க்கிரண்டாய் வாழ்ந்திடவேழோனாட்சி
சிந்தையாய்த்தனிக்குஞ்சேய்க்குச் செப்பினர்மனவிமூன்றாய்
விந்தையாய்வருமென்றோதி விதித்தனர்தரணிமாதே. (௩௩௪)

மாதவர்மொழியாற்பாம்பு வருந்திசைமாலில்மங்கை
வேதமாய்வருமென்றோதி விதித்தனர்கணிதமாகச்
சேதமாங்குருநாள்வந்தாற் செத்திடுமனவியொன்று
நீதமாய்குருமுற்பாதி நேர்ந்திடுமிருவர்சேரும் (௩௩௫)

சேருமென்றுரைத்தாரொன்று செத்திடுமறைநாள்முன்னில்
கூறினர்பிலமாயொன்று குறித்தனர்கணிதமாகச்
சீருடன்மனவிமூன்றிற் சேர்ந்திடுஞ்சொந்தமொன்று
சாரிடமனவிரெண்டுந் தரித்திடுமன்யமாதோ. (௩௩௬)

ஏழினோன்புகரோடொன்று யிருந்திடஞ்சேய்வீடாக
வாழ்வுடன்குடும்பமஞ்சில் வந்திடப்பவர்வந்துற்றால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமிருவராகத்
தாழ்வுடன்புகராண்டுள்ளாய்ச் சார்ந்திடுங்காரிநாளில். (௫௫௭)

ஏழினோன்மதிவீடேகி யிருந்திடச்சுபர்நோக்கில்லாத்
தாழ்வுடன்கரிசேயெட்டிற் றரித்திடப்பவர்வீடானால்
வாழ்வுடன்தோன்றுஞ்சேய்க்கு வகுத்தனர்மனவியொன்றாய்ச்
சூழுறஅன்யமாகத் தோன்றிடுமறைநாள்கேதில். (௫௫௮)

ஏழினோனுயிர்க்குநாலி லிருந்திடப்பாவர்நோக்க
வாழ்வுடன்புகர்சேய்திங்கள் வருமுயிர்தனில்வந்தெய்தத்
தாழ்வுடனிரண்டுமெட்டாந் தானத்திற்பவர்வந்துற்றால்
ஊழ்விதிப்படியால்மங்கை வுரைத்தனரிருவர்சேரும். (௫௫௯)

இருவரென்றுரைத்தார்மங்கை யிருவரிலொருவரொன்ற
வருவதுமீரெட்டேழில் வகுத்தனர்வருமென்றோதே
தரும்விதிப்படியாலொன்று சாய்ந்திடுமரவின்போக்கில்
குருவருந்திசையிலொன்று குறித்தனர்தரணிமாதோ. (௫௪0)

ஏழினுக்குடையோனாறி லிருந்திடச்சுபர்நோக்கில்லா
தாழ்வுடனவர்க்கிராறில் தனித்திடப்புகர்வந்துற்றால்
சூழுறவிதியாலேழோன் தோன்றியதனதில்மங்கை
ஊழ்விதிப்படியாயொன்று யுரைத்தனர்பலன்களற்பம். (௫௪௧)

வேறு.

ஏழினோன்புகரா யிந்துவீடதனி லிருந்திட வேழுசுத்தமுமாய், வாழ்வுடன் புகரோனிருந்திடுங் கோளன் வக்கிரன் காரியோடொன்றாய்ச், சூழுறவிவர்க ளுதயகேந்திரமாய்த் தோன்றிடப்பிறந்த சாதகற்கு, ஊழ்விதிப்படியா லுபயமாமனவி யுரைத்தனர் கணிதநூல் விதியால். (௫௪௨)

விதியுடனுபயமனவியர் சேரும் விளங்கியநாள்வகை தெரியச், சதிருடன்புகரோன் திசைவருந்தனதில் சார்ந்திடுந்தாரமொன்றாகும், துதிபெறவரினுங் களத்திரநாசம் தொல்கவிதிசைவருந்தனதில், பதிதனிலொன்றே வுடன்வருமனவி பகர்ந்தனர் புகர்திசையதனில். (௫௪௫)

வேறு.

எழினுக்குடையோனுச்ச மிருந்திடச்சுபர்கள்நோக்கத்
தாழ்வுடனுயிர்க்கீராறிற் றரித்திடமாந்திசேர
வாழ்வுடனிவர்க்கேழ்தன்னில் வந்திடமறைவந்துற்றால்
சூழுறமறைநாள்மங்கை தோன்றிடுந்தனதில்மாதோ. (௩௪௪)

வேறு.

எழினுக்குடையோன் சோமனுயிரண்டி லிருந்திடச் சுங்கனுமறையத், தாழ்விலாக்குருவு மதிக்குமைந்தினிலே தங்கிடச் சனியுமேஷீசம், ஊழ்விதிப்படியாற் றாரமுமொன்று யுதவிடும்வந்தநாள்முதலில், வாழ்வுடன்புதல்வர் தோன்றிடும் நாளேமங்கையர் பகையெனவறையே. (௩௪௫)

அறையெனசசொன்ன மங்கையர்பகையு மாறிரண்டாண்டிலே தீரும், தறையதிலேமோன் புகரதாயெட்டிற் றங்கிடச் சேயுட வீட்டில், நிறைபுதன் குசனும் மறைந்திடச் சசியும் நீலனுமொன்றதாய்க் கூடில், மறைமொழிப்படியே தாரமும்நாசம் வந்திடுமுதவிடாதிவற்கே. (௩௪௬)

எழினோன் மாலாயுயிர்க்கிரண்டதனி லிருந்திடச்சுபர்கள் நோக்கிடுமாம், வாழ்வுடன் மழைக்கோள் மறைமனையதனில் வந்திட மறைந்திடாதிடுகில், தாழ்வுடன்கவியுஞ்சாரும் வீடதிபன் தங்கிய திசைவருமாலில், சூழுறவிதியால் மணம்வருமெனவேதோன்றிய தாரமும் பெலமாம். (௩௪௭)

வேறு.

எழினிலரவுசுங்க னிருந்திட வேழினுதன்
தாழ்வுடன் பரிபொன்னேடு சட்டாட்டவியத்திற்சேர
வாழ்வுடன் புகரோன்றன்னை வரும்பவர்நோக்குமாகில்
சூழுறவிதியால் மங்கைதோன்றிடு முபயமோதே. (௩௪௮)

வேறு.

ஓதிடுமேனிவியொன்றே உதவிடுமரவுவந்தால்
நீதமாய்மதிபொன்போல நிகழ்த்தினர்கணிதமாகச்
சேதமாமனவியொன்று செப்பினரரவிற்பாதி
வேதமாயுடனேயொன்று விளங்கிடுங்கரிபோலாகும். ()

வேறு.

சந்திரனும்புகருடனே வுயிருக்கேழில்
தரித்திடவேஅதற்குடையோன் மறைந்துநீசம்
வந்திடவேகொடியபவ ருடனென்றாகும்
வந்திடுஞ்சேயவன்றனக்கு மனவிசேரும்
சிந்தையுடன்புகர்திசையில் மறையோன்நாளில்
சேருமவனபகாரம் முடிவிலாகும்
சுந்தரமாய்ப்பாரியவள் தனக்குமுந்தி
துஞ்சிடுமேதப்பாது கணிதங்கூறே. (ருரு0)

அட்டமத்திலேழின்கோள் தனித்துநீசம்
அமர்ந்திடவேபவர்வீடாய்ச் சுபர்கள்நோக்கத்
திட்டமுடனுயிரதனி லலரிவெள்ளி
சேர்ந்திடவேதோன்றியசேய் தனக்குமங்கை
சட்டமுடன்சப்தமக்கோள் சாருநாதன்
தங்கியநாள்திசைபுகரில் மணஞ்செய்விக்கும்
மட்டிடுஞ்சேய்வருமனவி அதிகசெல்வம்
வகுத்தனர்கள்சொந்தமதாய் நிறம்பொன்னாகும். ()

வேறு.

ஏழினோன்கரியாய்க் கொடியகோளுடனே இருந்திடவேழு பஞ்சமமாம், தாழ்வுடன் மழைக்கோள் நீசமாயாரல் சற்குரு மாந்தியோடொன்றாய்ச், சூழுறவிதியானுயிர்க்குமூன் றெட்டில் தோன்றிடச் சாதகன்றனக்கு, ஊழ்விதிப்படியா னுபயமாய்ம னவி யுரைத்தனர் கெணிதவாக்கியமாய். (ருருஉ)

வாக்கியப்படியா னுபயகோள் திசையில் வருமுயிர்க்கேழி னோன் நாளில், தாக்கிடும் மனவி சார்ந்திடும்புகரோன் தங்கிய திசை வருந்தனதில், போக்கினில் மனவி பொன்றிடு முடனே பொருந்திடு முடன்வருந் தாரம், பாக்கியம்வளரும் பாரியாளெ னவே பகர்ந்தனர் சாதகன்றனக்கே. (ருருரு)

வேறு.

எழினோன்மதியோடொன்று யிருந்திடமறையாதாகில்
தாழ்வுடன்புகரஞ்சாகித் தனித்திடச்சுபர்வீடானல்

சூழுறவிதியாற்பொன்னன் தோன்றியதிசையிற்கேது
வாழ்வுடனபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும். (ரு௫ச)

ஏழிஞேன்புகர்வீடாகி யிருந்திடவுயிர்க்கெட்டாக
வாழ்வுடனக்கோள்தானும் வருமிடமதிக்கொன்பானல்
சூழுறவிதியால்வந்து தோன்றியசேய்க்குமங்கை
ஊழ்விதிப்படியாற்சேரும் உரைத்தனரே மோன்வந்தால். ()

ஏழிஞேன்புகர்மால்கேது இந்துபொன்னுடனேயொன்ருய்த்
தாழ்வுடனுயிர்க்கிராறில் தரித்திடச்சுபர்நோக்குற்ருல்
சூழுறவிதியாற்காரி தோன்றியதிசையிற்கேது
வாழ்வுடனபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும். (ரு௫சு)

ஏழிஞேன்சுபரா யுச்சவீடதனி லிருந்திட மதிக்குக் கேந்திரமாய், வாழ்வுடன் புகர்சேய் வருமணேயிலமாய் வளர்ந்திடவுயிர்க்கிரண்டுற்ருல், சூழுறவிதியா லிரண்டிஞேன் திசையில் தோன்றிய பாதியில்மனவி, ஊழ்விதிப்படியால் வருமெனமூதோருரைத்தனர் தாரமொன்ருக. (ரு௫எ)

வேறு.

மந்தனும்புகரும்பொன்னும் மால்பரியிக்கோளொன்ருய்
வந்துயிர்தனக்குநாலில் வளர்ந்திடச்சுபர்பாராரேல்
சிந்தையாயிரண்டேழுஞ்சிற் சேர்ந்திடச்சுபர்நோக்கில்லா
வந்திடுஞ்சேய்க்குமங்கை வகுத்தனரிருபத்தொன்றில். (ரு௫அ)

மதிமகன்புகர்பொன்காரி வரும்பரியுடனுென்ருகிச்
சதிருடனுயிர்க்குநாலில் தரித்திடச்சுபர்வீடாக
விதியுடனிரண்டஞ்செட்டில் விளங்கிடப்பவர்வந்துற்ருல்
பதிதனிலிரண்டோன்நாளிற் பாதியில்மனவிசேரும். (ரு௫கூ)

பாதிநாள்மனவியாகப்பகர்ந்தனர் கெணிதநூலோர்
ஓதிடுங்குருதிநாளி லுரைத்தனர்மனவிநாசம்
நீதமாயரவுபுத்தி நேர்ந்திடுமனவியொன்று
வேதமாய்வருமென்ருேதி விதித்தனர்கெணிதமாய்ந்தோர். ()

வேறு.

ஏழினிற்காரி தனித்திடவேழோ னிருந்திடப் பவர்மனையாகி, வாழ்வுடனக்கோ ளுடன்மறைமானும் வந்திடச்சுபர்கள்

நோக்கிடதால், தாழ்வுடன் புகர்நாள் திசைதனிற் பாம்பில் சார்ந்திடுந் தாரமென்றுரையே, ஊழ்விதிப்படியால் மனவியாற் பலன்க ளுரைத்தன ரற்பமென்றேதே. (ருசுக)

ஓதவே உயிருக்கெட்டிரண்டதனி லுயர்வுடன் பாவர்வந் திடுகிற், சேதமாமனவி புகர்திசைகேது செப்பினர் மேல்மொழிப்படியால், வேதமாயஞ்சோன் திசைதனில் மனவி விதித்தன ரதிக யோக்கியமாய், நீதமாய்ப் பிலமாய்க் கெணிதநூற்படியே நிகழ்த்தினர் சாதகன்றனக்கே. (ருசுஉ)

வேறு.

ஏழினோன்புகர்மால்கேது இந்துபானுடனென்றாகித்
தாழ்வுடனுயிர்க்கிராறில் தரித்திடச்சுபர்நோக்குற்றால்
சூழுறவிதியால்மாலோன் தோன்றியதிசையில்வெள்ளி
வாழ்வுடனபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும். (ருசுரு)

வேறு.

காரிமதியுடன்சேர்ந்தே ஆவிக்கேழாய்க்
கருதுமக்கோள்சுபரோடே வுயிர்க்கிராறிற்
சூரியன்கேதுடன்புகரு மறைவீடாகித்
தோன்றிடவேவுயிர்தனக்குப் பன்னோனால்
சீருடன்தோன்றுடுஞ்சேய்க்குப் புகரோன்நாளில்
திங்கள்வருமபகாரம் மனவிசேரும்
பாரிற்சோதிடமுணர்ந்த மூதோர்முன்னாள்
பகர்ந்திடுமவ்வழியாகப் பலன்தானற்பம். (ருசுச)

வேறு.

ஏழினோன் பவாய்ப் புகர்மனையதனி லிருந்திடச் சுபர்கள் நோக்கிடதால், வாழ்வுடனக்கோள் வருமிடஞ் சுபமாய் வளர்ந்திடச் சுபர்கள் நோக்கிடவே, தாழ்வுட னுதிக்குஞ் சாதகன் றனக்குச் சதிருடன் பாம்புநாள் மறையில், ஊழ்விதிப்படியால் தாரம்வந்திடுமென் றுரைத்தனர் கணிதநூல் விதியால். ()

வேறு.

சூரியனுங்கரிமாலும் புகர்பொன்னென்றாய்த்
தோன்றுமிடம்மறையாமற் சுபர்வீடாகச்

சாருமுயிர்தனக்கேழோன் கவிவீடாகித்
தனித்திடவேஉயிர்க்காறிற் றரிக்குமானுற்
சீருடன்தோன்றிடுஞ்சேய்க்கு மனவியேகம்
செப்பினர்பொன்னிறமதுவாய் மதிநாளாகக்
கூறினர்முற்பாதியினுள் வருமென்ருேதிக்
குறித்தனர்நூற்படியாகத் தரணிமீதே. (௫௬௬)

வே று.

ஏழினேன்மறைமால்கேது இந்துபானுடனென்ருகித்
தாழ்வுடனுதயபே த் தரித்திடச்சுபர்வீடானுல்
வாழ்வுடன்தோன் றுஞ்சேய்க்கு வகுத்தனர்மனவிசொந்தம்
சூழுறவிதியாற்ட ம்பு தோன்றியதிசையில்மாலாம். (௫௬௭)

ஏழினேன்புகர்மாலொன்ருய் இந்துவீடதனிற்சேரத்
தாழ்வுடனுயிர்க்கீராறிற் சசிமறையுடனென்ருனல்
பேழ்வுடன்தோன்றுஞ்சேய்க்குப் பிலத்திடுமனவியொன்ருய்
வாழ்வுடனீரேழஞ்சில் வகுத்தனர்தரணிமீதே. (௫௬௮)

ஏழினேன்புகரோடேகி யிருந்திடச்சசிவீடாகத்
தாழ்வுடனக்கோள்மூன்றிற் றனித்திடப்பருதிவீடாய்
வாழ்வுடன்தோன்றுஞ்சேய்க்கு வகுத்தனர்மனவியொன்ருய்
சூழுறவிதியால்மாலில் தோன்றிடுங்கரிநாள்வந்தால். (௫௬௯)

மந்தனுமேழின்கோளும் வரும்புகருடனென்ருகி
விந்தையாயுயிருக்காருய் விளங்கிடவக்கோள்தானுஞ்
சிந்தையாமதிக்கஞ்சாகிச் சேர்ந்திடச்சுபர்வீடானுல்
வந்திடுமனைவியொன்று வகுத்தனர்பருதிவந்தால். (௫௭0)

மந்தனும்புகரோடொன்ருய் வருமிடம்மறையவக்கோள்
விந்தையாய்மதிக்கொன்பானில் விளங்கிடவத்தானக்கோள்
வந்துயிர்தனக்கிரண்டில் வளர்ந்திடப்பிறந்தசேய்க்குச்
சிந்தையாயீராறேழிற் சேர்ந்திடுமனவிமாதோ. (௫௭௧)

மாதவர்மொழியால்மேலோர் வகுத்தனர்கணிதமாக
வேதமாய்க்கொடியோனேழில் விளங்கிடச்சுபரிலாதால்
ஓதிடுமனவிநாசமுரைத்தனர் மதிநாள்தன்னில்
நீதமாய்மனவியொன்று நேர்ந்திடுந்தனதில்மாதோ. (௫௭௨)

ஏழினோனுயிர்க்கீராறி லிருந்திடப்பவர்வீடாக
வாழ்வுடன்புகருமொன்றாய் வருமிடமறையாதானால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமொன்றேயாகத்
தாழ்வுடன்பருதிநாளிற் சார்ந்திடுங்காரிவந்தால். (௩௭௩)

ஏழினோன்புகரோடொன்றா யிருந்திடக்குருவீடாக
வாழ்வுடனிக்கோள்தானும் மதிக்குக்கேந்திரம்வந்துற்றால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமறைநாள்வந்தால்
ஊழ்விதிப்படியால்மேலோ ருரைத்தனர்தரணிமீதே. (௩௭௪)

வேறு.

மதியுடனேயேழினுக்கோள் பவரோடொன்றாய்
வருமுயிர்க்குப்பன்னொன்றில் மறைக்கோளாகச்
சதியுடனேபவர்வீடாய்ப் பவர்நோக்கில்லா
சார்ந்திடவேமறைதனக்கோ ரஞ்சேழொன்றில்
விதியுடனேபுகர்தனிக்கச் சுபர்வீடாகி
விளங்கிடவேவுயிர்க்கேழிற் கொடியோன்வந்தால்
மதியுடன்மால்நிறமாக மனவிசேரும்
வகுத்தனர்தன்புகர்தனதில் மணநாளோதே. (௩௭௫)

வேறு.

ஏழினுக்குடையோன் புகர்கரிபாம்போ டேகியேமறைந் திடவருமால், வாழ்வுடனேழில் மதிகுருவெய்யோன் வந்திட முன்புபிர்சுத்தம், தாழ்வுடன்தோன்றுஞ் சாதகன்றனக்குச் சாற்றினார் மனவிமூன்றாக, ஊழ்விதிப்படியால் வருமெனநூலோ ருரைத்தனர் மூன்றுமாய்ந்திடுமே. (௩௭௬)

வேறு.

மதிமகன்குருசேய்பாம்பு மந்தனுமேழிற்சேரச்
சதிருடனிரண்டேழுஞ்சிற் றரித்திடப்பாவர்வாழ
விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்வயதீர்பத்திற்
கெதிபெறமனவிசொந்தங் கேசரியோகமுண்டாம். (௩௭௭)

வேறு.

ஏழினுக்குடையோ னுதயகேந்திரத்தி லிருந்திடப்பாவர் டாகச், சூழுறவிதியால் வெள்ளிசேய்பொன்னுந் தோன்றிடச்

சுபர்முன்பின்வருமால், தாழ்வுடன்பாம்பு திசைதனில்மணநாள் சாற்றினர்கணிதநூ லாய்ந்தோர், ஊழ்விதிப்படியால் மனவிநாள் முதலே யுரைத்தன ரதிகயோக்கியமாம். (௩௭௮)

அதிகமாய்வருமென் றுரைத்தனர்நூலா லாறிருபத்துநால் வயதிற், சதியுடன்மனவி மாய்ந்திடுமெனவே சாற்றினர்மேலவர் மொழியால், விதியுடன்வயது முப்பதுதனிலே விரைவுடன் மனவிவந்திடுமால், கெதிபெறவாழ்வன் மனைவியால்யோகங் கெணித்தனர் மறையன்போல்தேகம். (௩௭௯)

ஏழினிற்கரிமா விருந்திடவேழோ னேகியேவுதயகேந்திர மாய்த், தாழ்வுடனுயிரோன் புகருடன்மறைந்து சாரிடஞ்சுபர் கள்வீடானால், சூழுறவிதியாற் பாம்புநாள்திசையிற் றோன்றிய காரிவந்திடுகில், வாழ்வுடன்மனவி வருமெனக்கெணிதர் வகுத்தனர் சாதகன்றனக்கே. (௩௮0)

ஏழினிற்பரிமா விருந்திடவேழோ னேகியேவுதயகேந்திர மாய்த், தாழ்வுடனுயிரோன் புகருடன்மறைந்து சாரிடஞ் சுபர் கள்வீடானாற், சூழுறவிதியாற் பாம்புநாளதனிற் றோன்றிய திசையிற்பிற்பாதி,வாழ்வுடன்வருநாள் மனவிவந்திடுமால்வகுத்தனர் சாதகன்றனக்கே. (௩௮௧)

வேறு.

ஏழினேன்காரிவீட்டி லெழிலுறும்பாம்பினோடு
தாழ்வுடனுயிருக்கெட்டிற் றங்கிடப்பருதிசுங்கன்
வாழ்வுடனேழில்நிற்க மணம்புரிமனவியாறிற்
சூழ்விதியதனாற்றாரந் துஞ்சிடுமிரண்டொன்றோதே. (௩௮௨)

வேறு.

உதித்தெழுசெங்கதிரவனு மொள்ளியோனும்
உடனொன்றாய்ச்சேர்ந்துகேந் திரமதாகப்
பதித்தெழுநல்லுயிர்தனக்கு யேழோனேழிற்
பதிந்திடவேசுபர்வீ டாய்த் தரிக்குமாகில்
விதித்தெழுஞ்சாதகற்குலகில் மனவியொன்று
வேட்டல்புந்திசேய்துகையாம் வயதுதன்னில்
மதித்தெழும்பொன்னிறமாக வாய்ப்பள்பாரி
வந்திடவேசெந்திருவுண் டாகுந்தானே. (௩௮௩)

வேறு.

ஏழினேன்கரிவீடேகி யிருந்திடவேழிற்றீக்கோள்
தாழ்வுடனுயிர்க்கிராறிற் றரித்திடப்புகர்கேதானல்
வாழ்வுடன்கரிநாள்போக்கில் வருத்தனர்மனவிசேரும்
சூழுறவிதியாற்றூரம் துஞ்சிடும்புகரில்வெய்யோன். (௩அச)

வேறு.

ஏழின்கோள்மாந்தியுடன் வளரவுச்சம்
யிருந்திடுங்கோள்சேயவனே டேகிச்சேரத்
தாழ்வுறவேபுகர்மனையிற் றரிக்கவிக்கோள்
சாரவவருடன்புகருஞ் சேருமானல்
சூழுறவேயேழின்கோள் சேரநாதன்
தோன்றியநாள்திசைமதியில் மணஞ்செய்விக்கும்
நீழும்மணமேகமென மணநாள்தொட்டு
நேர்ந்திடுவன்மணவழியாய் முயற்சிகூறே. (௩அரு)

ஏழின்கோள்மாலுடனே வுதயமேறி
யிருந்திடுங்கோள்தான்மறைந்து ஆட்சியாக
வாழ்வுடனேவுபயமதில் வளரவெள்ளி
வந்திடவேஅதற்குடையோன் மறையுமானல்
சூழுறவேதோன்றியசேய் தனக்குக்கன்னி
தோன்றுயிர்க்கோள்திசைபுகரில் மணஞ்செய்விக்கும்
வாழ்வுடனேவளருமண மேகமென்று
வகுத்தனர்கள்கணிதமொழி தமிழாய்ந்தோர்கள். ()

ஏழின்கோள்கேதுடன்மா லுடனென்றாகி
யேகிடவேவுயிர்தனக்கு மறையவிக்கோள்
வாழ்வுடனேகாரியுடன் புகருஞ்சேர்ந்து
வளருமனேபஞ்சமமாய்த் தரிக்கவக்கோள்
தாழ்வுடனேபாவருடன் பவர்களில்லம்
தரித்திடவேதோன்றியசேய் தரணிமீதில்
சூழுறவேயவன்றனக்கு மனவிவாரார்
சொல்லினர்களாகமநூற் றெருத்துளோரே. (௩அள)

மறையுடனேயேழினுக்கோள் புகரொன்றாகி
வரவிவர்கள்கேந்திரமா யிவர்க்கேழாக

விரைவுடனேயிவர்களுக்கு முன்பின்றீயர்
 விளங்கிடவேமுன்தீயர் பரிகேதாக
முறையுடனேபின்தீய ராரலாக
 மொழிந்திடலாமிவன்றனக்கு மணமென்றேத
அறையுமெனவுயிர்க்கோளன் திசையிற்பாதி
 யந்தியமாய்ப்பாரிவரும் பிலமென்றேதே. (ருஅஅ)

வே று.

ஓதிடுமேழோன்பாவராய்வந்தா லுரைத்திடுந்தாரமுமுபயம் [க
தீதுடன்பவர்கள்சேர்ந்திடுஞ்சேய்க்குச் செப்பினர்தாரம்வந்திடு
வேதமாயருணன்திசைவரும்புகரில் விளங்கிடும்மங்கலமணநாள்
சேதமாமனவிசெப்பினர்கணிதர் திறமுடன்சாதகன்றனக்கே. ()

வே று.

எழினேன்குருவாய்ப் பாவர்வீடதனி லிருந்திடப் பாவர்நோக்கிடுமோம், தாழ்வுடனுயிர்க்கீ ராறினிற்புகருந் தரித்திடமாந்தியுமதனில், வாழ்வுடனுபயந் தனில்வர வுபயோன் வந்திட ஆரல்சூரியனுல், சூழுறவிதியால் மணம்வருங்கேதிற்றோன்றிய சுங்கன் வந்திடுகில். (ருகூ0)

வந்திடும்புகரில் மணமெனக்கெணிதர் வகுத்தனர் சாதகன்றனக்குச், சிந்தையாய்க் கொடியோன் சேரிடம்புகரோன் செல்மனை தனித்திடுமாகிற், சுந்தரவிழியாள் புகர்திசை மதிநாள் தோன்றிய பாதியில் வேட்டல், வந்திடும்மனவி கணிதவாக்கியமாய் வகுத்தனர் சாதகன்றனக்கே (ருகூக)

எழினேன்கரியாய் வளருகேந்திரத்தி லிருந்திடம்நீசம்வந்திடுகத், தாழ்வுடனுயிருக் கேழினிற்பாம்பு தனித்திடக்கேந்திரமாகச், சூழுறவிதியால் மால்புகருடனே தோன்றிடச்சாதகன்றனக்கு, வாழ்வுடன்மணநாள் புகர்திசைமறையில் வந்திடுமனைவிமுன்மாயும் (ருகூஉ)

எழினேன்கரியாய்க் காரிவீடதனி லிருந்திடப்புகர்கொடிசேயும், தாழ்வுடனதனிற் றங்கியகுருவுஞ் சார்ந்திடச்சாதகன்றனக்குச், சூழுறவிதியால் மனைவிநாலொன்று தோன்றிடும்பொன்திசைமுடிவில், ஊழ்விதிப்படியால் மனவியரெல்லா மொழிந்திடு மந்தியமுதவார். (ருகூந)

வேறு.

எழுடையோன்மறையோனு யாட்சியுச்சம்
இருந்திடவேயவர் தனேயே பவர்கள்நோக்க
வாழ்வுபுகரோனுடனே மதியொன்ருகி
வருமுயிர்க்கோள்மூன்றிலதில் வளருமாகில்
தாழ்வுடனேவுயிர்தனக்கே ழுதனில்நாகம்
தனித்திடவேதோன்றியசேய் தனக்குமங்கை
ஊழ்விதிநூற்படியெனவே உபயமாக
வுரைத்தனர்கள் மனவிவரும் நாளைச்செப்பே. (ருகூச)

செப்புமெனவேழுடையோ னேகிநிற்குஞ்
சேருமவர்க்கிராறுேன் திசையிற்பாம்பு
தப்புமபகாரமதிற் பாதிதன்னிற்
சாருமெனவொருமனவி பகையேகாட்டும்
இப்படிவந்திடுந்திசையிற் சுரியனுளில்
இசையுமபகாரமதிற் பாதிதன்னிற்
செப்பினர்களோர்மனவி வரினுமென்றே
ஜெகதலத்தோர் தனக்கறியக் கணிதமோதே. (ருகூரு)

ஓதுமெனத்தோன்றியதோ ருபயபாரி
யொழிந்திடுநாள்புகர்திசையி லரவுவந்தால்
சேதம்வருமிதுதவறு தெனவென்றேதி
செப்பினர்களாகமநூல் தெரிந்தமேலோர்
நீதியுடன்புகருடனே கரிசேய்பாம்பு
நின்றிடவேஉயிர்தனக்கி ராறிற்போனுல்
சீதமுடன்தோன்றியசேய் தனக்குமங்கை
செப்பினர்தோன்றுதெனவே கணிதநூலால். (ருகூசு)

வேறு.

ஏழினுக்குடையோனறி லிருந்திடவேழோன்ருனும்
வாழ்வுடன்கரிவீடேகி வந்திடப்புகர்க்கெட்டாகச்
சூழுறவிதியாற்சுங்கன் தோன்றுயிர்க்குபயஞ்சேர்ந்தால்
தாழ்வுடன்தோன்றுஞ்சேய்க்குத் தாரமேதோன்றுதென்னே. ()

ஏழினோன்புகரோடொன்றா யிருந்திடக்கவிவீடாக
ஆழதலாம்புகர்க்கேழ்தன்னி லம்புலியாரல்சேர்ந்தாற்
சூழுறவிதியாற்செவ்வாய் தோன்றியதிசையிற்சுங்கன்
வாழ்வுடனபகாரத்தில் வருத்தனர்மனவிசேரும். (௱௯௮)

சேருமென்றுரைத்தார்மேலோர் செப்பியகணிதநூலாற்
கூறியமனவிகற்பு குறுகிடுந்தவறாதென்றே
சீருடன் அப்பெண்ணாலே சேர்ந்திடுங்கிரகம்பூமி
சாருமென்றுரைத்தார்மேலோர் தரணியிலறிந்துபாரே. (௱௯௯)

வேறு.

சுக்கிரன்தண்மதியுடனே கரிவீடேகத்
தோன்றுகரியுயிர்க்கேழோ னுடனொன்றாகித்
தக்கதெனவுயிர்தனக்கீ ராறிலேறித்
தரித்திடவேமதிக்கிவர்கள் மறையாமற்றான்
நிற்குமுயிர்க்குபயதா னத்திலேகி
நின்றிடவேவுயிர்க்கெட்டிற் பவர்வந்துற்றால்
திக்குமனமன்னியமா யுபயபாரி
சேர்ந்திடுமேமனவிவரும் நாளைச்செப்பே. (௨௦௦)

செப்புமென ஆரல்திசை முடிவிலொன்று
சேர்ந்திடுமேகரிமதிபோல் நிறமென்றோது
தப்பியதோர்வருமனவி யரவுநாளில்
சாய்ந்திடுமேபுகரபகா ரத்திலோர்து
முற்படிவந்திடுமெபகா ரத்திலொன்று
மொழிந்தனர்கள்மதிநிறமாய் வரினுமாகும்
தப்புவதுமில்லையெனக் கெணிதமென்று
சாஸ்திரநூற்படிவிதியாற் றிரட்டியோதே. (௨௦௧)

வேறு.

ஏழினோன்கரியா யுபயவீடதனி லிருந்திடவேழுசுத்தமூ மாம், வாழ்வுடன்மழைக்கோளரவுடன்கூடி வருமனைகொண்டவீ டுற்றால், தாழ்வுடனரவு திசைதனிலேழோன் தனிலபகாரநாள் வருகில், சூழுறவிதியாற் றோன்றிடுமனவி தொல்நிறம்மறையன் கோளோதே. (௨௦௨)

ஓதிடுமனவி பங்கமுமாகி யுதவிடும்பாரி யொன்றாகும், சூத தாய்மனவி கணவன்சொல்லஞ்சச் சொல்மொழிமுந்தியேயுரைக் கும், வேதமாயுடனே ஐயிருஆண்டு விளங்கியசேர்க்கை யில்லா தால், நீதமாய்வரினும் செல்வமேசமமாய் நேர்ந்திடும் பாரிதன் வழியே. (ருoரு)

பாரியாற்செல்வம்பலித்திடாதெனவே பகர்மொழிகொடிய சொல்லாகும், சீருடன்மனவி செலுத்திடுங்கற்பாம் செப்பிய கணிதநூல்விதியால், கூரியவேழோ னுடனொருகோளன் குறுகி டப் பாரிகற்பொழியும், ஆரிருபுருடன் மன்மதன்கணையா லழுந் துவ ரிதுதவறாதே. (ருoச)

வேறு.

ஏழுடையோன்மாலாகிப் புகர்பானோடு
ஏகுமில்லங்கரிமனையாய்த் தரிக்குமாகில்
தாழுயிர்க்கேழாம்வீடு சுத்தமாகச்
சாருமதற்கேழ்தனிலே பவரேநின்றால்
சூழுமணம்வயதிருபத் தேழுமேலாய்த்
தோன்றிடுமேசொந்தமென மனவிரண்டு
வாழுமுயிர்க்கேழதனில் வரினுங்கோளன்
வருந்திசையில்தனதினிலே மணமென்றோதே. (ருoரு)

ஓதுமெனவுபயதொத்து மாதுசேரும்
உரைத்தனர்களேகதொத்து சிலநாட்போக்கும்
சீதமுடனுபயமணம் சிலநாள்வேறும்
செப்பினர்கள்மூன்றுமண மறையோன்நாளில்
நீதியுடன்மனவிமன மகிழவாழ்வோன்
நேருதொத்துமாதொருவர் தவறாதாகும்
சோதிடமாயிதுபெரியோர் மொழியென்றோதிச்
சொல்லினர்கள்தப்பாது தரணிமீதே. (ருoசா)

வேறு.

எழினோன்கரியாய் மால்புகருடனே இருந்திடவுயிர்க்குநா லதனில், வாழ்வுடனுபயந் தனிற்பவர்தனிக்க வருமுயிர்க்கெட் டினிற்புவரால், தாழ்வுடனுதிக்குஞ் சாதகன்றனக்குச் சதிரு டன் புகர்திசைமாலில், சூழுறவிதியா லுபயமாய்மனவி தோன் றிடுங் காரிபோலொக்கும் (ருoஎ)

ஏழினிலரவு தனித்திடவேழோன் இருந்திடம்நீசகேந்திர மாய், வாழ்வுடனக்கோ ளுடனொருகோளன் வந்திடப்பாவர் நோக்கிடவே, தாழ்வுடன்மாந்தி மால்புகருடனே சாரிடங்கரி மனைதரித்தால், சூழுறவிதியால் தோன்றிடுஞ்சேய்க்குத் தொல் மணம் உபயமென்றோதே. (௩0அ)

ஓதியபுகரோ னிருந்திடுங்கோள னுதவிய நாள்திசைதன தில், சீதமாய்மனவி சேர்சொரூபந்தான் செப்பியகரிநிறமாகும், வேதமாய்க்கரியின் திசையதில்மறைக்கோள் விளங்கியபுத்திவந் திடவே காதலாயிரண்டு களத்திரமுடனே காளையும்பூவில்வாழ் குவனே. (௩0௯)

ஏழின்கோள்சுபரா யிரவியோடொன்றா யிருந்திடங்கார கன்வீடாய், வாழ்வெனுமக்கோ ளுதயகேந்திரமாய் வந்திடஅவ ருக்கேழ்பவராய்த், தாழ்வுடன்பவர்க ளிருந்திடமுன்பின் தங் கியபாம்பு சந்திரனும், சூழுறவிதியா லரவுநாள்பாதி தோன்றிடு மனவிமுன்சேதம். (௪௧0)

வேறு.

ஏழுடையோன்மதியாகிப் புகர்பானோடு
ஏகுமில்லமுதுமகனைத் தரிக்குமாகில்
வாழுயிர்க்கேழாம்வீடு சுத்தமாக
வளருமந்தவீடதனை மறைநோக்குற்றால்
சூழுமணம்வயதிருவே ழுபயமேலாய்த்
தோன்றிடுமேசொந்தமென மனவிசேரும்
தாழுமணம்வெகுபிலமா யேகமென்று
சாஸ்திரநூற்படிவிதியாற் கணிதமோதே. (௪௧௧)

ஏழுடையோன்மாலாகிப் புகர்பானோடு
ஏகுமில்லங்கரியவனைத் தரிக்குமாகில்
தாழுயிர்க்கேழாம்வீடு சுத்தமாகச்
சாருமதற்கேழதனில் மறையோன்நின்றால்
வாழுமணம்வயதிருவே ழுபயமேலாய்
வாய்த்திடுமேசொந்தமதாய் மனவிரண்டு
சூழுமறையோன்திசையிற் றனதிலொன்று
தோன்றிடுமேஓர்மனவி தரணிமீதே. (௪௧௨)

மீதேகேளுபயதொத்து மாதுசேரும்
விளம்பவதிலேகதொத்து சிலநாட்போக்கும்
சீதமுடனுப்பமணம் சிலநாள்வேறும்
செப்பினர்கள்மறைதிசைநாள் தனதிற்சாரும்
வேதமுடனேகதொத்து தவறுதாகும்
விதித்தனர்கள்மறைதிசையி லரவுபுத்தி
சோதிடமாயோர்மனவி நாசங்காட்டும்
சொல்லினர்களாகமசாஸ் திரத்தின்னூலால். (௪௧௩)

ஏழுடையோன்மறையோனுய்ப் புகர்வீடேகி
யிருந்திடவேவுடன்பவர்கள் தரிக்குமாகில்
வாழுமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றானும்
மால்பருதியுடன்கூடி மறையுமாகில்
தாழ்வுயிர்க்கேழுவர்மனையைப் பவர்நோக்குற்றால்
சார்ந்திடுஞ்சேயவன்றனக்கு மனவிரண்டாம்
சூழுறவேபுகர்திசையிற் கரியன்வந்தால்
தோன்றிடுமேஓர்மனவி நிறம்பொன்மாலே. (௪௧௪)

மாலெனவேவ்வருமனவி பருதிபோக்கில்
மாய்ந்திடுமேதப்பாது கெணிதவாய்மை
சீலமுடன்வோர்மனவி மதியன்நாளிற்
சேர்ந்திடுமேவருந்தனது நிறம்பொன்னாகும்
சாலவெனமணமுதலே வளருமின்பம்
சார்ந்திடுமேவெகுபிலமாய் தரணிமீதே
தூலமுடன்வரினுமண முறைசொல்லுந்தும்
தோன்றுகற்புநெறிதவறுள் வளருஞ்செல்வம் (௪௧௫)

சந்திரனேழாங்கோளாய்ப் புகரின்வீட்டிற்
றனித்திடவேயதற்குடையோ னுதயமேறிப்
புந்திபரியுடன்கூடித் தரிக்கவந்தால்
பொருந்திடுஞ்சேயவன் றனக்குமனவியொன்றும்
விந்தையுடன்மூவாறு வயதின்மேலாய்
விதித்தனர்சொரூபபங்கம் நிறம்பொன்னாகும்
சிந்தையுடன்மணமுதலே யதிகசெல்வம்
சேர்ந்திடுமேதப்பாது தெரிந்துகொள்ளே. (௪௧௬)

சுங்கனுயிர்க்கேழோனு யாட்சியுச்சம்
தோன்றிடவேவுடனெருகோள் தரியாதாகச்
சங்கையுடன்புகர்தனக்கொன் பதனிற்பாம்பு
தனித்திடவேபாம்புதிசை யதனிற்சுங்கன்
தங்குமபகாரம்வரில் மனவிசொந்தம்
சார்ந்திடுமேகாரிமதி ரூபமோது
மங்கைதிறமனதுகஷ்ட மதிகச்சொல்லாள்
வரினுமிடஞ்சமமதுவாம் மனவியேகம். (சகஎ)

எழுடையோன்மறையோனு யேழிலேகி
யிருந்திடவேவுடன்புகருந் தரிக்குமாகில்
வாழ்வுடனேழாங்கோளன் திசைவந்துற்றால்
வருந்தனதில்பாரிவரும் நிறம்பொன்காரி
தாழ்வுடனேவருமனவி சமமாய்ச்செல்வம்
சார்ந்திடுமேமனவியராற் பலன்தானற்பம்
சூழுமனம்ஏகமுமாய்க் கணிதமாகச்
சொல்லினர்களிதுதவறா தெனவென்றோதே. (சகஅ)

எழுடையோனுயிர்க்குமூன் றுறுபன்னென்
றிருந்திடவேவுயிர்தனக்கே ழலரிசேயாம்
தாழ்வுடனட்டமமதனிற் சுங்கன்கேது
தரித்திடவேயிவன்றனேயே மறைநோக்குற்றால்
வாழ்வுடன்பூவிற்றோன்றி வளருஞ்சேய்க்கு
வரும்புகரோன்திசையதனி லுயிர்க்கிராறேன்
சூழுமபகாரம்வரில் மனவிகாரி
தோன்றிடுமேதப்பாது கணிதஞ்செப்பே. (சகசு)

ஆரலுமேழாங்கோளாய்ச் சுபர்களோடு
அமருமிடங்கரிமனேயாய்த் தரிக்குமாகில்
நேருயிர்க்கேழ்தனிற்புகரோன் தனிக்கக்காரி
நின்றநிலேப்பார்வையினுற் புகரைநோக்கச்
சாருமுயிர்க்குபயமெட்டிற் பவர்கள்சேரச்
சாருடையோன்தனேமறையோன் நோக்குமானுற்
சீருடனேஉபயமண மனவிசேரும்
சேர்ந்திடுநாளேழுடையோ னேகும்நாதன். (சஉ0)

நாதன்வருந்திசையதனி லேழின்கோளன்
நல்குமபகாரம்வரில் மனவியொன்று
சீதமுடன்மறையனப காரம்வந்தால்
சேர்ந்திடுமேவோர்மனவி கணிதமாக
நீதியுடன்மனவிரண்டு நிறம்பொன்னுகும்
நேரிடுமென்னியகருமங் கனிந்தசொல்லான்
ஓதுமணம்நாள்முதலே யதிகபாக்யம்
உதவிடுமேமனவிதந்தை யுடன்வாழ்வானே. (சஉக)

சூரியனேழாங்கோளாய் ஏகுமில்லந்
தோன்றுமுயிர்கேந்திரமாய்க் கருமன்வீடாய்ச்
சாருமிக்கோளிருந்திடும்வீ டதிபன்ருனுஞ்
சார்ந்தாவிக்கேழ்வளரப் பாவரோடு
சீருடனேவருமழைக்கோள் பதினென்றேகிச்
சேருமொருகோளுடனே தரியாதானல்
கூறுமெனத்தோன்றியசேய் தனக்குமேலோர்
குறித்தனர்கள்மணம்வருநாள் கணிதமோதே. ()

ஓதுமெனவயதிருப துபயமேலாய்
உதவிடுமேகரிமதிபொன் நிறமதாக
வேதமுடன்வஞ்சமனங் கனிந்தசொல்லாள்
விளங்குகற்பு நெறிதவருளுரைசொல்மந்தம்
சீலமுடன்புகருடனே யேழின்கோளன்
சேய்கொடியோன்காரியுடன் தரிக்குமாகில்
நீதியுடன்வயதிருவே ழுதனில்மூன்று
நேருமணம்மனவிவரும் மூன்றுந்தீர்க்கம். (சஉங)

சுங்கனுந்தன்மனேயதனிற் றனிக்கவெள்ளி
தோன்றவதற்கிராறி லேழோன்நிற்கத்
தங்குபரிமாலரவு மாந்தியோடு
தரித்திடவேபவர்சுபர்கள் நோக்குமாகில்
சங்கையுடனுயிர்தனக்கே ழுதனிற்பாவர்
சாருசுபருடன்கூடி வளருமாஞல்
மங்கைவரும் நாளெனவேகணிதமாக
வகுத்தனர்களாகமசாஸ் திரத்தின்றூலால். (சஉச)

நூலெனவேயேழுடையோன் ருென்றுமில்லோன்
நூலமர்தநாள் திசையி லுயிர்க்கிரண்டோன்
சீலமுடன்நாளபகாரத்தின் போக்கிற்
சேர்ந்திடுமேஏகமணம் நிறம்பொன்ஞகும்
தூலமுடன்பாரிதந்தை சமமாய்வாழ்வன்
தோன்றுகற்புநெறிதவருன் மனதுவஞ்சங்
கோலமுடன்தோன்றியசேய் தனக்குமங்கை
குறிகிடுமேஅந்தியத்திற் பாரியில்லான். (சஉரு)

வேறு.

ஏழிஞேன் கரியாய்ச் சொந்தவீடதனி லிருந்திடப் புகருடன் மதியும், தாழ்விலா துயிர்க்கு நாலினிற்ருென்ற சற்குரு மதிக்கிரண்டிடமாய்க், கோளுயிரிரவி குசன்புதன்கேதுங் கூடிடப் பிறந்தசாதகற்கு, வாழ்வெனு மங்கை புகர்திசைமதியில் வந்திடுமெனச்சிலர் மொழிந்தார். (சஉசு)

மொழிந்தனர்மனவி பொதுநிறமாகும் மோசமில்குணநலமுடையன், கழிந்தனதாசி பிறர்மனேபோகன் காரிகைதனக்குமேஅன்பன், இழிந்திடும்பாம்புக் குயிருக்கொன்பானி லிலங்கிடச்சேயுமேபார்க்கில், அழிந்திடுமன்னே முப்பதோடிரண்டாண்டாறுமாதத்தின்மேலாகும். (சஉஎ)

ஏழிஞேன்குருவா யிரவியுமாந்தி யிருந்திடங்கரும கேந்திரமாய், தாழ்விலாப்புகருங் கேதுடனிலாபஞ் சார்ந்திடவஞ்சின் கோள்நீசம், கோள்குருமாலாய்க் குசனுடன் புகரில் குறுகிடப் பிறந்த சாதற்கு, ஊழ்விதிப்படியா லேழிஞேன்றிசையி லுரைத்தனர் மனேவிவந்திடுமே. (சஉஅ)

மனவிய ரிரண்டாய் வகுத்திடுஞ் சேய்க்கு மாய்ந்திடுங்காரி நாள்தனதில், துணேவியாமனவி காரிநாள்கருமன் தோன்றிய நாளினில் வருமாம், இனமுடன்மாதர் பிறர்மனேபோக னிங்கித சுமுகனுய் வாழ்வன், குணநலன்கோபி கொடுத்திடுந் தனங்கள் குறைவிலாதிருந்திட வல்லன். (சஉகூ)

ஏழினிலரவு மிருந்திடவக்கோ ளிணங்கிய அஞ்சினிலுச்சம், தாழ்விலாப் புகரோன் மாலுடன் மதிக்குச் சார்ந்திட அஞ்

சினிலாகக், கோளுயிருடையோன் மறைந்திடச்செவ்வாய் குறு கிடப் பானுவோ டானால், ஊழ்விதிப்படியா லிரவியிற் கரிநாள் உண்மையாய் மனவிதோன்றிடுமே. (சரு0)

ஏழினேன்மாலா யிரவியுமரவு மிருந்திடப்புகருடன்கூடில், தாழ்விலாதேழி லஞ்சின்கோள்தரிக்கச் சற்குருவிவர்களைநோக் கில், வாழ்வதுபுகரில் மாலவனுளில் மங்கையர் வந்திடுமிரண்டு, கோளிலாதிரவி திசையினில் மணமாய்க் கூடிடுமெனச்சிலர்மொ ழிந்தார். (சருக)

மொழிந்தனர்மனவி பொதுநிறமாகும் மோசமில் கோபி யாம் பின்னில், கழிந்திடுந்தயவாங் கருத்திடுந்தேகன் கருதிய வளர்த்தியு மாவன், அழிந்திடும்பிதாவு மாறின்கோளரவி லன் னையுமேகிட விதித்தார், நெளிந்திடவயது முப்பதோ ரெட்டில் கின்றிடும் பெலமென வறையே. (சருஉ)

ஏழினேன்குருவா யரவுடன்கரிவீ டிருந்திடப் புகருடன் மாலுங், தாழ்விலாவுயிருக் காறினில்மறையச் சசியுடன் கேது மூன்றுகில், வாழ்வதுமேழி லரவுசேயுடனே வந்திடப்பிறந்தசா தகற்கு, மீளவே குடும்பன் றிசையினில்மணமும் விளங்கிடும் பிறர்மனை போகன். (சருரு)

வேறு.

களத்திரத்தானத்தோனுங் கதிர்மகன்புகர்சேய்கேதும்
துளக்குடனுயிர்க்குமூன்றிற் றேன்றிடப்பாம்புமாந்தி
அளக்கருந்தகரில்மேவ அந்தணனுயிரிலாகிற்
களத்திரம்புகர்நாள்தன்னிற் கருதுவன்குருவந்துற்றால். ( )

வேறு.

ஏழினிற் செவ்வா யிருந்திடவக்கோ ளிணங்கிய புகருடன் கேதுங், தாழ்விலா துயிர்க்கு லாபமாய் வரினுஞ் சாற்றினு ருயிரி னில்மாந்தி, கோலமாய் வரினுங் குசதிசையதனிற் கூடிடுமால வன் பொசிப்பில், தூலமாய் மணநா ளாகிடுமென்றே சொல்லி னர் பெரியவர் தாமே. (சருச)

வேறு.

ஏழினில்மதிமால்கேது மிருந்திடக்காரிநோக்கத்
தாழ்விலாப்புகருமஞ்சிற் றரித்திடக்குருவுமூன்றாய்

வாழ்வுடனிரவிசோமன் வந்திடப்பாம்புநாளில்
ஊழ்விதிப்படியாற்றா முரைத்தனர்வருமென்றோதே. (ச௰௬)

வருமெனமனவிரண்டாய் வாய்த்திடுங்கரிநாளொன்று
தருவதுமன்றிப்பின்னாற் றாசிகளிடத்துநேசம்
மருமலர்க்குழலார்க்கன்பன் வயதுமூத்தவளைப்போகம்
துரிதமாய்நடத்தவல்லன் சூதுவஞ்சனையுஞ்செய்வன். (ச௰௭)

ஏழினோன்புகர்வீடேகி யிருந்திடவதற்குநாதன்
தாழ்வுடன்குருவோடொன்றாய்ச் சாரிடமதிவீடுற்றால்
வாழ்வுடன்றோன்றுஞ்சேய்க்கு வகுத்தனன்புகர்நாள்பாம்பிற்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமேகமாதோ. (ச௰௮)

மறையவனேழோனொன்றாய் வருமிடமறையவெள்ளி
நிறைவுடனுயிர்க்கெட்டாகி நின்றிடமதிக்குநாலில்
முறையுடன்றனிக்குமாகில் மொழிந்தனரீரேழொன்றில்
மறையவன்நிறம்போல்மங்கை வகுத்தனரொன்றேயாகும். ()

ஏழினோனுதயமேறி யிருந்திடவேழிற்பூமன்
தாழ்வுடனீசமாகித் தனித்திடமறையோன்நோக்க
வாழ்வுடன்புகர்மால்வெய்யோன் வருமிடஞ்சேய்வீடுற்றால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமிருவர்மாதே. (சச0)

மாதவர்மொழியாற்பாம்பு வருந்திசைதனதிலொன்று
வேதமாய்வருமென்றோதி விதித்தனர்கெணிதவாய்மை
ஓதிடுமனவிநாசம் உரைத்தனரிரவிபொன்னன்
நீதமாயன்னோன்நாளில் நேர்ந்திடுமனவியொன்றே. (சசக)

வேறு.

ஏழின்கோள் பவர்சுபரா யுபயந்தன்னி
லிருந்திடக்கோள் தான்மறைய வேழில்வெள்ளி
தாழ்வறவேஅக்கோளன் றனக்குமூன்றில்
தங்கிடவேயீராறு தானந்தன்னில்
வாழ்வுறவேஉபயதிபன் வளருமாகில்
வந்திடுஞ்சாதகற்குமணம் பாரிகற்பாஞ்
சூழுறவேயிவன்சிலநாள் பரத்தைமோகன்
தொல்புவியோர்நிகழ்த்துமொழி தனைக்கேளாதான். ()

வேறு.

ஏழினோன் சுபராய்க் கேந்திரமதனி லிருந்திடப் பாவர் நோக்கிடுமால், வாழ்வுடன் புகரோன் கரிமனையதனில் மறைந் திட மறைக்குக் கேந்திரமாய்த், தாழ்வுடன் றோன்றுஞ் சாத கன் றனக்குச் சார்ந்திடுஞ் சூரியன் றிசையிற், சூழுறவிதியால் வளருமுற்பாதி சுபர்வரும் நாளினில் மனவி. (சசஙு)

மனவியாற் பெலமாய் வளர்ந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் நூல்விதிப் படியால், வினையுட னேழோன் நீசமாய் மறையால் விளங்கிடச் சுபர்கள்நோக் கிடதால், முனையுட னிரண்டஞ் செட்டினிற் பாவர் முயன்றிடில் முன்வருமனவி, அனையவள் சேத மதிவருநாளி லழிந்திடு முடன்வரு மணநாள். (சசச)

ஏழினோன் சுபராய்ப் புகருடனுயிர்க்கா றிருந்திட மதிக் குக் கேந்திரமாய், வாழ்வுட னிரண்டஞ் செட்டினிற்பாவர் வந் திடத் தோன்றிடுஞ் சேய்க்குச், சூழுறவிதியா லரவுநாள்மாலில் தோன்றிடுந் தாரமென்றுரையே, ஊழ்விதிப்படியா லுயர்குருத னதி லொழிந்திடு மொன்று வந்திடுமால். (சசரு)

வேறு.

ஏழினுக்குடையோனேழி லிருந்திடப்புகர்பானொன்றாய்
வாழ்வுடனிக்கோள்தானும் மதிக்குக்கேந்திரம்வந்துற்றால்
தாழ்வுடன்பரிநாட்பொன்னன் சார்ந்திடுமபகாரத்திற்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமதிகயோகம். (சசசு)

வேறு.

ஏழினோன்பவரா யுச்சவீடதனி லிருந்திடக் கரிமதியொன் றாய், வாழ்வுடன்பவர்வீ டாகிடமறையா வந்திடஞ்சுபர்கள் நோக்கிடுமால், தாழ்வுடனுயிர்க்கேழ் தனித்திடப் புகரோன் சார்ந்திடச் சாதகன்றனக்குச், சூழுறவிதியாற் பாம்புமுற் பாதிதோன்றிடு மங்கைவந்திடுமால். (சசஎ)

வந்திடும்பாம்பு திசையில்முற்பாதி வணங்கியநாள்முதல் மனவி, சிந்தையில்மயக்கங் கணவனைச்சேரும் செப்பியபாம்பு தன்திசையில், விந்தையாய் வருமுன் திசையதுதொலைந்தால் விளங்கிய பாதியின்மயக்கம், சுந்தரப்படியால் தொலைந்திடுமெ னவே தோன்றியதாரமுஞ் சுபமாம். (சசஅ)

